91 A/L
WEEKEND CLASSES
(Sat & Sun)
நடைபெறுகின்றன.
★ பிரிவு I ★
07.30 - Zoology
08.30 - Botany
07.30 - Pure Maths
08.30 - Applied Maths
09.30 - Chemistry
10.30 - Physics
எமது வழமையான ஆசிரியர் குழு
NEW MASTER INSTITUTE
B.M C.Lane, Jaffna.
241, Navalar Road Jaffna.

பக்கங்கள் நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

91 A/L
WEEKEND CLASSES
(Sat & Sun)
நடைபெறுகின்றன
★ பிரிவு II ★
08.30 - Zoology
09.30 - Botany
10.30 - Chemistry
11.30 - Physics
7.30 - Pure Maths
8.30 - Applied Maths
புதிய பகுதிகள் ஆரம்பமாகியுள்ளன.
NEW MASTER INSTITUTE
B.M C. Lane, Jaffna.
241, Navalar Road Jaffna.

சுடர் 5: பிரமோதூத ஞூ ஆனி மீ 6 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஃதா பிறை 26 (20 - 06 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:117

## யாழ். போதனா வைத்தியசாலை நேற்று தற்காலிகமாக மூடப்பட்டது

### அனேகமான வார்ட்டுகள் சேதமாகிய நிலையில்

யாழ்ப்பாணம், ஜூன் 20

நேற்று செவ்வாய் அதிகாலையிலிருந்து யாழ் கோட்டையிலிருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்கள், மற்றும் ஹெலி, பொம்மர் தாக்குதல்களை அடுத்து யாழ்போதனா வைத்தியசாலை நேற்று முற்றாக மூடப்பட்டது.

யாழ் ஆஸ்பத்திரி மூடப்பட்டது ஒரு தற்காலிக ஏற்பாடே என்று ஆஸ்பத்திரி வட்டாரங்களிலிருந்து தெரிய வந்தது.


நேற்று மாலை ஆஸ்பத்திரிப் பகுதி வெறிச்சோடி பயங்ரமாகக் காட்சி அளித்துக் கொண்டிருந்தது. ஆஸ்பத்திரி நலன்புரிச் சங்கத்தைச் சேர்ந்த ஒரு சிலர் மட்டும் எஞ்சி உள்ள ஓரிரு பொருள்களை அப்புறப்படுத்தும் கடைசிநேர பணியில் ஈடுபட்டிருந்தனர்.

நோயாளர்கள் முழுப்பேரும் நேற்று ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தனர். சிலர் தாமாகவே வெளியேறி இருந்தனர்.

செவ்வாய் அதிகாலைமுதல் நடத்தப்பட்ட ஷெல், ஹெலி தாக்குதல்கள் காரணமாக ஆஸ்பத்திரியில் பரவலாகச் சேதங்கள் காணப்படுகின்றன.

சீலிங், ஜன்னல் கண்ணாடிகள் நொருங்கி உள்ளன. ஓரிடத்தில் கதவு ஒன்று பிளந்த நிலையில் காணப்படுகின்றது. பரவலாக ஆஸ்பத்திரியின் முழுப் பகுதிகளிலும் சேதங்

[3ஆம் பக்கம் பார்க்க]



வெறுமையாகக் கிடக்கும் யாழ் ஆஸ்பத்திரிக் கட்டில்கள்

## சென்னை கோடம்பாக்கத்தில் நேற்று பத்மநாபா, கிருபா உட்பட 13 பேர் சுட்டுக் கொலை!

பிந்திய செய்தி



பத்மநாபா

### மேலும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வினர் 15 பேர் காயம்

சென்னை, ஜூன் 20

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் திரு, கே.பத்மநாபா, வடக்கு,கிழக்கு மாகாணத்தின் நிதி அமைச்சர் திரு பெ. கிருபாகரன் ஆகியோர் உட்பட 13 ஈ.பி.ஆர்.எல்.எவ். பிரமுகர்கள் நேற்று சென்னை கோடம்பாக்கத்தில் குடியிருப்புப் பகுதி ஒன்றில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

துப்பாக்கியுடன் வந்த ஆறு பேர் கொண்ட குழு ஒன்றினால் இவர்கள் சுடப்பட்டனர். இந்தச் சம்பவத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ்வினர் 15பேர் படுகாயமுற்றனர்.

## வடக்கு - கிழக்கில் யுத்த நிலை; மேலும் 500 கோடி ரூபா தேவை

### ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு, ஜூன், 20

வடக்கு--கிழக்கில் யுத்தச் சூழ்நிலை நிலவிவருவதாகவும், அதற்கு 500 கோடி ரூபா தேவை எனவும் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா தெரிவித்தார்.

கண்டியில் நேற்று இருவேறு வைபவங்களில் பேசுகையில் அவர் முன்கண்ட தகவல்களைத் தெரிவித்தார்.

பள்ளேகலவில் நேற்று மாலை நடந்த பொதுக்கூட்டத்தில் பேசியபோது அவர் தெரிவித்ததாவது:-

வடக்கு--கிழக்குப் பகுதியில் யுத்த சூழ்நிலை நிலவுகிறது. தற்போதைய நெருக்கடியால் சகல இன மக்களும் பாதிக்கப்பட்டு உள்ளார்கள் - என்றார்.

தலதா மாளிகையில் யாத்திரீகர் ஓய்வுவிடுதி ஒன்றை திறந்துவைத்த பின்னர் நடந்த கூட்டத்தில் பேசுகையில் ஜனாதிபதி சொன்னதாவது:-

**சமூகங்கள் ஒற்றுமை**

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் சண்டை சமூகங்களுக்கு இடையிலான யுத்தம் அல்ல.

நீதியை நிலைநாட்டி அநீதியை அழித்து விடுவதற்கான யுத்தமே இன்றுவடக்கு-கிழக்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் சமாதானப் பேச்சுக்களை நடத்தியதால் சகல சமூக, சமய மக்களும் ஒற்றுமைப்பட்டிருந்தார்கள்.

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் நடத்தப்பட்ட பேச்சுக்கள் மூலம் எமக்குக் கிடைத்த மற்றும் ஒரு வெற்றி சிங்கள பௌத்தர்கள் ஏனைய இன மக்களை இன்னல் படுத்தி வருகின்றார்கள் என்று தெரிவிக்கப்பட்டு வந்த குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்று நிரூபிக்கப்பட்டதாகும்.

[3 ஆம் பக்கம் பார்க்க]

### ஹெலிக்கொப்டர் மீது மாங்குளத்தில் தாக்குதல்

நேற்று மாங்குளம் இராணுவ முகாமில் தரையிறங்கமுயன்ற ஹெலிகொப்டர் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடத்தினர்.

இதனையடுத்து ஹெலிக்கொப்டர் தரையிறங்காமல் மேலே கிளம்பிச் சென்றது.

இந்தத் தாக்குதலில் ஹெலிக்கொப்டருக்குச் சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. (உ)

## ★பொம்மர் குண்டுமழை! ★ ஹெலித் தாக்குதல்!! ★ஷெல்வீச்சு!!

# யாழ்கோட்டை பகுதியில் தொடர்ந்தும் சண்டை!

### உள்ளே புகும் முயற்சியில் புலிகள்; சம்பவத்தில் ஐந்து போராளிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் தொடர்ந்தும் நேற்று கடும் சண்டை நடைபெற்றது.

நேற்றுக் காலையில் மூன்று பொம்மர்கள் சுற்றிச் சுற்றிப் பறந்து இப் பகுதியில் குண்டு மழை பொழிந்தன ஹெலிக்கொப்டரிலிருந்தும் அடிக்கடி தாக்குதல் நடத்தப்பட்டது. கோட்டை முகாமிலிருந்து அதைச் சூழவுள்ள பகுதிகளை நோக்கி விடாது தொடர்ந்து ஷெல் வீச்சுக்களும் இடம் பெற்றன.

நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலையில் கோட்டை முகாம் மீது திடீர் தாக்குதல் நடத்திய விடுதலைப்புலிகள் கோட்டையின் நுழைவாசல் பகுதியை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர்.

அதிகாலையில் நடந்த இந்த மோதலில் விடுதலைப் புலிகளின் ஐந்து போராளிகள் வீரமரணம் அடைந்தனர்.

செவ்வாய் அதிகாலையில் வாகனம் ஒன்றில் வெடி மருந்துகளை நிரப்பிக் கோட்டை வாசல் பகுதியை நோக்கி விடுதலைப் புலிகள் செலுத்தியதாகவும்-

வாகனம் வாசல் பகுதியில் திடீரென மோதி பெரும் சத்தத்துடன் வெடித்ததில் கோட்டை இராணுவத்தினர் நிலை குலைந்ததாகவும்-

அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கோட்டை நுழைவாயில் பகுதியை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர் என்றும் கூறப்பட்டது.

நுழைவாயிலைக் கைப்பற்

[3 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



ஒருபுறம் குண்டு... மறுபுறம் துண்டு என்று பிரசுரங்களை வீசுகினம் போலை......!

## இனப்படுகொலையை நியாயப்படுத்த முன்னோடியே ரசாயன ஆயுத புரளி

### விடுதலைப் புலிகள் மறுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20

தமிழ் பேசும் மக்கள் மீது இனப்படுகொலையை கட்டவிழ்த்து விடுவதற்காகவும், அத்தகைய இனப்படுகொலையை உலகின் முன் நியாயப்படுத்துவதற்கு முன்னோடியாகவுமே நாம் இரசாயன ஆயுதங்களைப் பாவித்ததாகப் பொய்ச் செய்தி வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி, அரசாங்கம் பரப்பிய இரசாயன ஆயுதப் புரளி குறித்து நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

மட்டக்களப்பில் ஸ்ரீலங் காப்படை முகாம்கள்மீது புலிகள் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியுள்ளனர் என்று ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரிகள் கூறியதாக

[3 ஆம் பக்கம் பார்க்க]

### பலாலி, மயிலிட்டியிலும் நேற்று வானத் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 20

நேற்று வயாவிளான், பலாலி, மயிலிட்டிப் பகுதிகளிலும் மோதல்கள் இடம்பெற்றன.

மோதல்களை அடுத்து ஷெல் தாக்குதல்களும், ஹெலிக்கொப்டர் தாக்குதல்களும் இடம்பெற்றன.

தாக்குதல்கள் பிற்பகல் இரண்டு மணிவரை நீடித்தன.

இந்தப் பகுதிகளிலிருந்து ஏற்கனவே மக்கள் பெருமளவில் வெளியேறியிருந்ததனால் உயிர்ச்சேதங்கள் பெருமளவில் தவிர்க்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

இப்பகுதியில் காயமடைந்த சிலர் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கும், படுகாயத்திற்குள்ளானவர்கள் மந்திகை வைத்தியசாலைக்கும் எடுத்துச் செல்லப்பட்டனர்.

[ந-9]

### பலாலி ஷெல் குண்டுகள் வல்வையில் வீழ்ந்து வெடித்தன!

வல்வெட்டித்துறை, ஜூன் 20

பலாலியிலிருந்து ஏவப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் மூன்று ஷெல் குண்டுகள் நேற்று (செவ்வாய்) அதிகாலை 1-45 மணி அளவில் வல்வெட்டித்துறையில் அடுத்தடுத்து விழுந்து வெடித்தன.

இந்த ஷெல் குண்டுகளி

[3 ஆம் பக்கம் பார்க்க]

### யாழ். நகருக்கு மேலாக நேற்று அவ்ரோவும் சுற்றியது

#### பிரசுரங்கள் அள்ளி வீசப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூன் 20

நேற்று மாலை சுமார் 6 40 மணியளவில் யாழ்நகரப்பகுதியைச் சுற்றிய ''அவ்ரோ'' சிறியவிமானம் ஒன்று வானில் இருந்து துண்டுப்பிரசுரங்களை அள்ளி வீசியது.

''எல்லா ஊர்வாசிகளுக்கும்'' என்ற தலைப்பிலான அந்தத் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த சில தகவல்கள் வருமாறு:-

★ இராணுவமுகாம்களைச் சுற்றியுள்ள பகுதிகளில், விடுதலைப் புலிகள் நெடுங்காலமாக பாதுகாப்பு அரண்கள் மற்றும் வெடி வைக்கக்கூடிய நிலைகள் ஆகியவற்றை நிறுவியுள்ளனர்.

★ கடந்த 12ஆம் திகதிக்குப் பின்னர் இராணுவமுகாம்களுக்கு உணவு, தண்ணீர் ஆகியவற்றை கொண்டுசெல்ல முடியாது தடுக்கப்பட்டுள்ளது

★ காயங்களுக்குள்ளான ஆபத்தான நிலையில் இருக்கும் இராணுவத்தினரை அப்புறப்படுத்த முடியாது தடுக்கப்பட்டுள்ளது.

★ படையினருக்கு உணவு,

( 3 ஆம் பக்கம் பார்க்க)

### ஈழத்தமிழர் கொல்லப்படுவது குறித்து இ.காங்கிரஸ் கவலை

புதுடில்லி, ஜூன் 20

இந்திரா காங்கிரஸ் கட்சியின் செயற்குழு நேற்று முன்தினம் புதுடில்லியில் கூடியது.

இலங்கையில் தமிழ்ப்பொதுமக்கள் கொல்லப்படுவது மீண்டும் ஆரம்பமாகியுள்ளது குறித்து கூட்டத்தில் கவலை தெரிவிக்கப்பட்டது.

பெருமளவில் இலங்கைத் தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்படுவது, இந்திய அரசின் இலங்கைக் கொள்கை கைவிடப்பட்டதையே காட்டுகிறது என்றும் இந்திரா காங்கிரஸ் செயற்குழு தெரிவித்துள்ளது. (ஒ எ)

**சுப நேரம்**

20 - 6 - 90
புதன்கிழமை ஆனி 6
சுபநேரம்!
4-24—5-54
இராகுகாலம்
11-54—1-24

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமநாதன் மகளிர் கல்லூரி பவளவிழா சிறப்பிதழ்

## இந்துப்பண்பாட்டின் நிலைக்களனாக விளங்கும்

## இராமநாதன் மகளிர் கல்லூரி

இராமநாதன் கல்லூரி 75 ஆண்டுப் பூர்த்தியை தற்போது கொண்டாடிக் கொண்டிருக்கிறது.

சேர் பொன் இராமநாதன் அவர்கள் சிறந்த அரசியல் வாதியாக சமூக சீர்திருத்த வாதியாக சமயத் தொண்டராக பல்வேறு துறைகளிலும் உழைத்த உத்தமராக இலங்கைவாழ் மக்களுக்கு ஓர் தேசியத் தலைவராக விளங்கினார். அவர் தமிழ்ச் சமுதாயத்திற்கு இரு பெரும் பாடசாலைகளையும் அரிய தோர் கற்கோயிலையும் எழுப்பியவர்-

இந்து மாணவர் தமது பண்பாட்டிற்கும், பாரம்பரிய வழக்கத்திற்கும் ஏற்ற சூழலியே கல்வி பயில வேண்டும் என உணர்ந்தார். ஆழ்ந்த கல்வி அறிவும் ஒழுக்க சீலமும், சமயப்பண்பாடும் வாய்ந்த பெண்களே ஆண்களை விட தேசிய முன்னேற்றத்திற்கு அதிகம் உதவுவர் என்ற கொள்கையும் அவரிடமிருந்தது.

இதனால் நல்ல இல்லத்தரசிகளையும், நன்மக்களையும் உருவாக்க 1913ஆம் ஆண்டு தைமாதம் 20 ஆம் திகதி அவர் இராமநாதன் மகளிர் கல்லூரியை தாபித்தார்.

இக்கல்லூரி பழமைமை வாய்ந்த பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாக்கும் உறைவிடமாகவும், இந்துப்பண்பாட்டின் நிலைக்களனாகவும் விளங்கவேண்டுமென்பது அவரது ஆவல். இங்குதமிழுக்கும், சமயக்கல்விக்கும், வழிபாட்டிற்கும் முக்கிய கவனம் கொடுக்கப்படுவதோடு பல் துறைகளிலும் கற்பித்தல் நடைபெறுகின்றது.

வழிபாட்டு வழக்கம் நிலைத்திருக்க வேண்டிக் கோயிலை மட்டும் நிறுவவில்லை, அங்கு நாள்தோறும் இசைக்கப்படும் பண்ணிசை, பூசைகள் முதலியனவற்றை எல்லாம் வரையறுத்து வைத்திருக்கிறார்- தாபகர் சேர். பொன்னம்பலம் இராமநாதன்.

இக்கல்லூரி பவள விழாக் கொண்டாடுகிறது என்றால் இத்தனை ஆண்டுகளாகத் தனது தாபகரை நினைவுகூர்ந்து அவருக்கு அஞ்சலி செய்கிறது என்பதாகும்; நன்றிக்கடன் செலுத்துகிறது என்பதாகும்.

அவரது மனையாட்டி, லீலாவதி அம்மையார், மருகர் திரு. சு. நடேசபிள்ளை, மகள் சிவகாமசுந்தரி ஆகியோருக்கும், கல்லூரி அதிபர்கள் ஆசிரியர்களுக்கும் நன்றி கூறும் விழாவாக பவளவிழா அமைகிறது.





இராமநாதன் மகளிர் கல்லூரி ஸ்தாபகர் சேர் பொன் இராமநாதனும் பாரியாரும்

### அதிபர்கள்

இக்கல்லூரியின் முதல் அதிபர் செல்வி புளோரன்ஸ் பெயர் எமேரி (Florence Fair Emery) ஆவார். அவரைத் தொடர்ந்து ஆங்கிலப் பெண்மணிகள் நால்வர் அதிபர் பதவியிலிருந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து தமிழ்ப் பெண்கள் பதவியேற்றனர். முதலாவது தமிழ் அதிபர் ஓய்வுபெற்ற முன்னை நாள் கல்விப்பணிப்பாளர் திருமதி ஆர். ஆர். நவரத்தினமாவார்.

—(செல்வி இரத்தினா செல்லையா)

பெண்கள் தமிழ் இலக்கியத்துக் கதாநாயகர் போல் சிறப்புற்று வாழ வேண்டுமென்பதற்காக கல்லூரியில் இலக்கிய, காவியத் தலைவிகளின் பெயர்களைத் தாங்கிய விடுதிச் சாலைகளை தாபகர் அமைத்திருக்கிறார். [உதாரணம்: தமயந்தி, கண்ணகி, ஜானகி, சகுந்தலா போன்ற பெயர்கள்] யாழ்ப்பாணத்தில் உள்ள கல்லூரிகளிலே முதன் முதலாக பண்ணிசை, சங்கீதம், நடனம் மற்றும் கலைகளைய

### கல்லூரி நலன்விரும்பி

மாலை தொடுத்தல், கோலம் போடுதல் முதலானது இக் கல்லூரியில் தான் முதலில் ஆரம்பிக்கப்பட்டன எனலாம். இன்றும் இவற்றில் இராமநாதன் கல்லூரியே மிக முன்னணியில் நிற்கின்றது.

முன்பு இக்கல்லூரியில் நூல் நூற்றல் கலையும் இருந்தது. ஆனால் இன்று காலத்திற்கேற்ப வாழ்க்கைத்திறன், தொழிற்கல்வி, ஹோட்டல் முகாமைத்துவம் ஆகியன சிறந்த நிலையில் இருக்கின்

[3ஆம் பக்கம் பார்க்க]



இராமநாதன் மகளிர் கல்லூரி முன்னாள் முகாமையாளரான கலாநிதி சு. நடேசபிள்ளையும் பாரியாரும்.


இராமநாதன் கல்லூரி சிறப்படைய

★ வாழ்த்துகிறோம் ★

இணுவில் கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கம்

பவளவிழாக் காணும்

இராமநாதன் கல்லூரி சிறப்புற்று ஓங்க

★ இறைவனை இறைஞ்சுகிறோம்! ★

டென்சி படப்பிடிப்பாளர்,

கே.கே.எஸ். வீதி, இணுவில்.

இராமநாதன் கல்லூரி

நீடூழி காலம் வாழ வேண்டுமென

வாழ்த்துகிறோம்

விவசாயிகள் புனர்வாழ்வுச் சங்கம்

இணுவில்


## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

திருநெல்வேலியில் உள்ள 18 பரப்பு தோட்டக்காணி நீர் வசதியுடன் உடன் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: ஹோட்டல் சுபாஸ், யாழ்ப்பாணம். (3908)

ஒல்லாந்திலிருந்து இறக்குமதி செய்த (Crimsonglobe) பீட்றூட் விதை விவசாய ஆய்வுகூட அனுமதிபெற்றது. உயர் விளைச்சல் தரவல்லது. 200 கிராம் டின் ரூ 150. 00 தேவைக்கு: பிள்ளையார்' 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3736)

புத்தம் புதிய REMINGTON TYPE-WRITER CEILING FAN சிறிய அலுமாரி கட்டில் மெத்தை FLOOR POLISHER பெரிய அளவிலான பிறேம் போட்ட உலகப்படம் ஆகியன விற்பனைக்குண்டு. 37, மாட்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [3909]

அல்சேஷன் 1½ மாதம் ஊசி போடப்பட்ட குட்டிகள் விற்பனைக்கு உண்டு. இ. மகாதேவா, 140, செல்லர் வீதி, கல்வியங்காடு, நல்லூர். (13503)

### TOEFL

August / October / November - 90 பரீட்சை எடுப்பவர்களுக்குப் பிரத்தியேக வகுப்பும், தனிப்பட்ட வகுப்பு வசதியும் உண்டு தொடர்பு; S. B. Iyar, 12 (36), வைமன் வீதி, நல்லூர். [13385]

### புறொயிலர் குஞ்சுகள்

Christombu Farm. Three-acre Farm, Bairaha Farm, புறொயிலர் குஞ்சுகளை முன் கூட்டியேபதிவுசெய்து பெற்று கொள்ளலாம் Bairaha Farm புறொயிலர் குஞ்சுகள் மட்டும் July 15 வரை மட்டுப் படுத்தப்பட்ட விநியோகம். July 15 இன் பின் தேவையான அளவு Bairaha Farm புறொயிலர் குஞ்சுகளைப் பெற்றுக் கொள்ளலாம். சற்குணராசா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (3774)

### தவறி விட்டது

எனது காருக்குரிய லைசென்ஸ், அடையாள அட்டை இல: 441370148 V சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி அனுமதிப்பத்திரம், இவற்றையடங்கிய கைப்பேசுடன் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து S. சிதம்பரநாதன் (நாதஸ்வரம்), அளவெட்டி வடக்கு, என்ற முகவரியில் அல்லது உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்: (3906)

### தேவை

''கண்ணன் காமன்ஸ்'' நிலையத்துக்கு துணிகளை வெட்டவும், தைக்கவும் அனுபவமுள்ள பெண்கள் தேவை நேரில் வரவும். தொடர்பு:- ''கண்ணன் காமன்ஸ்'' K. K. S வீதி, கோண்டாவில் [13508]

### நியமனக்கடிதம் அடுத்தவாரம்

முதலாம் இரண்டாம் தரப் பாடசாலை அதிபர் பதவிகளுக்கான தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நியமனக் கடிதங்கள் அடுத்த வாரம் அனுப்பி வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### அரசாங்க அறிவித்தல்

#### பாவனைக்குதவாத உபகரணங்கள் ஏலவிற்பனை — 09 - 07 - 90

இப்பிராந்திய திணைக்களத்தில் பாவிக்கப்பட்டு இப்பொழுது பாவனைக்கு உதவாத நிலையில் உள்ள பின்வரும் வகையான பொருட்கள் 09-07-90 திங்கட்கிழமை காலை 11 00 மணிக்கு எனது காரியாலயத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். ஆகக் கூடிய கோரிக்கையாளர் உடனடியாகப் பணத்தைச் செலுத்தி பி. ப 3 00 மணிக்கு முன்னதாக பொருட்களை எடுத்துச் செல்லல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| Record Changer | — | றெக்கோட் சேஞ்சர் |
| Amplifier | — | அம்பிளிபயர் |
| Generator | — | ஜெனறேட்டர் |
| Epidascope | — | எபிடஸ்கோப் |
| Projector | — | புறஜெக்டர்ஸ் |
| Loud Speaker | — | லவுட்ஸ்பீக்கர் |
| Tape Recorder | — | டேப்றெக்கோடர் |
| Battory Charger | — | பற்றறி சார்ச்சர் |
| Slide Projector | -- | சிலைட் புறொஜெக்டர் |
| Transformer | — | ற்றான்ஸ்போமர் |

ஒப்பம்: ந. கனகசபை,
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

59, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.
14 யூன், 90. [[illegible]-4747]

### VACANCY

#### POST OF TEACHER

**CHUNDIKULI GIRLS' COLLEGE JAFFNA.**

1. A Graduate to teach Chemistry and Mathematics for Advanced Level Classes.
2. A Music Teacher with A. T. C. L. or Higher Qualification to teach English Singing from Year 1 – 5.
3. A Shorthand Teacher to teach Pitman's Shorthand and prepare students for London Examinations. Should have a High command of English.

Applications close on 28th June 1990.

**PRINCIPAL.**

(C/4753)

### முதல் உதவிப்படை (St. John Ambulance Association) நல்லூர்

நல்லூர் பிரிவுக்கு உட்பட்ட அனைவரும் புதன் கிழமை (20 ஆம் திகதி) மாலை ஐந்து மணிக்கு பிறவுண் வீதி தலைமைக்காரியாலயத்தில் தவறாமல் சமூகம் அளிக்கவும்.

Mr. S. Kannathasan,
Corps Superintendent (Nallur)

18 - 6 - 90 (C/4805)


எமதருமைப் புதல்வன் எங்கள் அருமை ஆனந்தி குடும்பத்தின் அணையாத ஒளிவிளக்காய் இருந்து எமையெல்லாம் துயரில் ஆழ்த்தி விட்டுப் பிரிந்து சென்ற

### ஓராண்டு திதி நாள்

தாயின் மடியில்
1. 3. 1971

தாயக மண்ணில்
1. 6. 1989

ஆண்டு திதி
20. 6. 1990



நாகரெத்தினம் ஆனந்தராஜா
[யாழ். வைத்தீஸ்வரா மாணவன்]

ஆண்டொன்று சென்றதுதான் உம்நினைவு அதிகம் ஆனந்தி! அலைகடல் போல் ஓடுகின்றது கண்ணீர் ஆனந்தி! பால்வடியும் உன் பொன்முகம் எங்கே ஆனந்தி! பல்கலைக்கழகம் புகுவாய் என நாம் கண்ட கனவு ஆனந்தி! காலம் பதில் சொல்லும் எனக் காத்திருந்தோம் ஆனந்தி! கண்ணீர் தான் நாம் கண்டோம் ஆனந்தி! கொடுங்கூற்றவர்கள் உன்னை அழித்தனரோ ஆனந்தி! நீ செய்யாத குற்றங்களுக்கு தண்டனை இதுதானோ ஆனந்தி!

இதனை அறிய யாரும் இல்லையோ ஆனந்தி!
உன் மரணம் ஆயிரம் ஜெனனம் ஆனந்தி!

எத்தனை ஆண்டு சென்றாலும் நித்தம்
உம்மை எம் இதயத்தில் பூசித்து வணங்கும்

அன்பான அப்பா, அம்மா, அக்கா, சிவம் அண்ணா, ஜெயம் அண்ணா, விஜி தம்பி, ஸ்ரீ தம்பி, கௌரி தங்கை, அன்ரிமார், மாமாமார்.

பால்பண்ணை றோட்,
44, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். [13453]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மண்ணில் ஆதிக்கம் செலுத்த முடியாது என்பதை அரசு - படைகளால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை!

## உதயன்

### இன்று அவனுக்கு நாளை உனக்கு

நேற்று இப்பத்தியில் எழுதியிருந்தது போலவே, எதிர்பார்த்தது போலவே, யுத்தம் தொடங்கிவிட்டது! தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசாங்கம் திங்கள் மாலை யுத்தப் பிரகடனம் செய்தது. வடக்கு-கிழக்கில் முழு அளவில் யுத்தநிலை நிலவியதாகப் பாதுகாப்புத் துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்னா திங்கட்கிழமை பி.பி.ஸிக்கு வர்ஜிதம் செய்திருந்தார்.

போர் புரியும் இருசாரார் மட்டும் இறந்தும், காயமுற்றும் நஷ்டம் அடையும் யுத்தம் அல்ல இது. அந்த இருசாராரையும் விட இடையில் உள்ள பொதுமக்கள் இறந்தும், அங்கம் இழந்தும் அல்லலுறும் யுத்தம் இது

அவை மட்டுமா? தமிழ் மக்களை தமது சொந்த மண்ணில் சொந்த வீட்டில் வாழ முடியாது உயிருக்கு அஞ்சி, அதனைப் பாதுகாக்கும் ஆசையோடு இடம் பெயர்ந்து நிர்க்கதியாகி அவதியுறச் செய்யும் யுத்தம் இது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் ஒரு லட்சத்துக்கும் அதிகமான தமிழ் பேசும் மக்கள் இதுவரை இடம்பெயர்ந்து, அகதிகளாகி அவதிப்படுகின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வலி-வடக்குப் பிரதேசத்தில் மட்டும் ஐம்பதினாயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் இடம்பெயர்ந்து, தமது சொந்த வீடுகளை விட்டு வெளியேறி உள்ளனர். திங்கள் இரவு யாழ். கோட்டையை அண்டிய பகுதிகளில் இருந்து மேலும் பல்லாயிரம் பேர் இடம் பெயர்ந்து விட்டனர்.

வவுனியாவில், கிளிநொச்சியில் என்று ஏனைய தமிழ் மாவட்டங்களிலும் கணக்கெடுத்தால் உத்தேசமாக ஐந்து லட்சம் பொதுமக்கள் இடம் பெயர்ந்து, அகதிகளாகிவிட்டனர். மன்னாரிலிருந்து பலர் முன்னரைப்போல் தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்றுவிட்டார்கள்

இடம் பெயர்வோர், அகதிகள், என்ற பெயர்களை மீண்டும் மீண்டும் தமிழர்கள் சூட்ட வேண்டிய துர்ப்பாக்கியநிலை அவர்களைப் பிடித்திருக்கிறது. அந்தத் தோஷம் நீங்குவதற்கான அறிகுறியைக் காணோமே! தமிழர்கள் மத்தியில் நிலவும் ஒற்றுமையின்மையும் இந்தத் தோஷத்துக்கு உரிய காரணநாயகர்களில் ஒருவர் என்பதை மறந்துவிடக்கூடாது.

இடம் பெயர்வோருக்கு பாதுகாப்பு, தங்குமிட வசதி, உணவு — வைத்திய வசதிகள் செய்து கொடுக்க வேண்டிய பொறுப்பும் தமிழ்மக்களையே சார்கிறது. தாமும் நாளைக்கு அகதியாகக் கூடிய ஒருவர், இன்று அகதியானவருக்கு, இடம் பெயர்ந்தவருக்கு உதவ வேண்டிய ஒரு கடமை உண்டு.

யுத்தம் நடக்கிறது என்று எல்லோரும் வீட்டிற்குள் இருந்தால் பாதிக்கப்பட்டவர்கள் பல அவஸ்தைகளுக்கும், அவலங்களுக்கும் ஆளாக நேரிடும். இன்றைக்கு அடுத்தவனுக்கு நடப்பது, நாளை தனக்கு நடக்கக்கூடும் என நினைத்து அடுத்தவனைத் தானாக உருவகித்து வசதிகளையும், நிவாரணங்களையும்செய்து கொடுப்பது ஒவ்வொரு தமிழனதும் கடமையாகும்.

தமிழர்களை அழிக்க முனைந்துள்ள சக்தி — அது தான் அரசு — பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

தொண்டர் ஸ்தாபனங்கள், பணவசதி படைத்தவர்கள், சர்வதேச மனிதாபிமான இயக்கங்களின் உதவியைப் பெற்றே பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ வேண்டும்.

அதற்கு முதல் ஒவ்வொரு தமிழனும் தன்னாலான உதவிகளை உடனடியாகச்செய்ய வேண்டும். அப்படிச் செய்யாவிடில் தமிழன் மனிதாபிமானம் இல்லாத மாந்தையாகவே கருதப்பட வேண்டியவன்.

---

10-06-90 அன்று மட்டக்களப்பில் சிங்கள காவல் துறையினருடன் உண்டான சிறிய பிரச்சினை ஒரு போராக மாறியது என்று பலர் கருதலாம்.

11ஆம் திகதியில் இருந்து 16ஆம் திகதி போர் நிறுத்தம் ஏற்படும்வரை 75க்கும் மேற்பட்ட போராளிகள் உயிரிழந்தார்கள். 300க்கும் மேற்பட்ட பொதுமக்கள் சிங்கள இராணுவத்தால் கொல்லப்பட்டார்கள். பல கிராமங்கள், கடைகள் எரிக்கப்பட்டன.

16ஆம் திகதி நாம் போர் நிறுத்தத்திற்கு இணங்கிய போதும் அரசு போர்நிறுத்த உடன்பாட்டை மீறியதோடு

## அதன் விளைவே இன்றைய போர்; 'விடுதலைப் புலிகள்' இதழ் விளக்கம்

தமிழ்பேசும் மக்கள்மீது முழுப் போரைப் பிரகடனப்படுத்தி உள்ளது. தொடர்ந்தும் தமிழ், முஸ்லிம் மக்கள் பெருமளவில் கொல்லப்பட்டு வருகின்றனர். உடைமைகள் அழிக்கப்பட்டும் வருகின்றன.

ஒரு சிறு பிணக்கு பெரும் போராக மாறியமைக்கு பல காரணங்கள் இருந்தன.

### பேச்சும் தயாரும்

ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி எம்முடன் பேசியபொழுது, தான் போரை விரும்பவில்லை என்றும் பிரச்சினையைப் பேசித் தீர்க்க விரும்புவதாகவும் கூறி வந்தார்.

ஆனால் சிங்களப்படை மேலும் மேலும் விரிவாக்கம் செய்யப்பட்டு முகாம்கள் பலமாக்கப்பட்டுபோருக்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டன.

குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்படும் எனக் கூறப்பட்டது.

ஆனால் குடியேற்றங்கள் தொடர்ந்தன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒன்று அல்லது இரண்டு முகாம்களைத் தவிர மற்றயவை மூடப்படும் என்று ஜனாதிபதி கூறினார்.

ஒரு சில முகாம்களை எமது திருப்திக்காக மூடியபின் மற்றைய முகாம்களை மூடுவதால் சிங்களவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை, முஸ்லீம்கள் முகாம்களை மூடப்படுவதை விரும்பவில்லை எனக் கூறிக்கொண்டு அம்முகாம்களைப் பலப்படுத்தினார்கள்.

உதாரணமாக தோப்பூர், மூதூர் முகாம்களை மூட முஸ்லிம் மக்கள் விரும்பிய போதும், அரசு அவர்கள் விரும்பவில்லை எனக்கூறி மூட மறுத்தது.

அண்மையில் நடந்த போரில் முஸ்லீம் மக்களைப் பாதுகாப்பதாக ஏமாற்றும் அரசு கல்முனை, வாழைச்சேனை, மூதூர், கிண்ணியா பகுதிகளில் வாழும் முஸ்லீம் மக்கள் மீது குண்டுகளை வீசி அவர்களை அழிக்கத் தயங்கியதில்லை.

மாகாணசபை விரைவில் கலைக்கப்படும் என்றும் ஆறாவது சட்டத்திருத்தம் விரைவில் நீக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

### காலம் கடத்தினார்கள்

ஆனால் சாதாரண பிரச்சினைகளை பெரிதுபடுத்தி, இதனால் தெற்கிலும் நாடாளுமன்றத்திலும் சுமுகமான சூழ்நிலை ஏற்படவில்லை எனக் காலம் கடத்தினார்கள்.

தமிழீழத்தில் அமைதியும், சமாதானமும் ஏற்பட என்று

> பேச்சுவார்த்தைகளில் அரசாங்கம் இணங்கிய— உறுதி அளித்த விடயங்கள் பின்னர் அவற்றைச் செயற்படுத்துவதில் ஏற்படுத்திய தாமதங்கள், போர் மூளுவதற்கான காரணிகள் என்பவற்றை விளக்கி, விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அதிகாரபூர்வ ஏடான ''விடுதலைப் புலிகள்'' ஆனி இதழில் வெளிவந்த ஆசிரியத் தலையங்கத்தை இங்கு மறுபிரசுரம் செய்கிறோம்.

கூறிக்கொண்டு தமிழீழத்தின் அழிவுக்கு இந்தியப் படையோடு ஒத்துழைத்த ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, புளொட் போன்ற குழுக்களுடனும் தமிழீழத்தில் எவ்வித ஆதரவும் அற்ற தனிமனிதக் கட்சிகளுடனும் அரசு கூட்டுறவை ஏற்படுத்தியது.

இந்தியா செய்ததுபோல, அவர்களை எமக்கு எதிராக பயன்படுத்தும் முயற்சியில் மறைமுகமாக இறங்கியது.

வடக்கு, கிழக்கு மாகாணசபை ஆளுனராக தமிழர் அல்லது முஸ்லீம் ஒருவரை நியமிக்கவும், திருகோணமலை அரசாங்க அதிபராக தமிழரையும், அம்பாறையில் மேலதிக அரசாங்க அதிபராக முஸ்லீமையும் நியமிக்க இணங்கியது.

### அம்பாறை விவகாரம்

அம்பாறையில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றார்கள் என்றும் அங்கு சிங்களவர் ஒருவரே அரச அதிபராக இருக்க வேண்டும் எனக் கூறிய அரசிடம் அம்பாறையில் முஸ்லீம் மக்களே பெரும்பான்மையினராக வாழ்கின்றார்கள் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. அதைத் தொடர்ந்து மிகுந்த தயக்கத்துடன் மேலதிக அரச அதிபராக ஒரு முஸ்லீமை நியமிக்க இணங்கியது.

இதையும் சூழ்நிலை சரியில்லை என்று கூறிச் செய்யாமல் காலம் கடத்தியது.

சிங்கள அரசு சமாதானம் என்ற போர்வையில் தனது இராணுவம், காவல்துறை, அரசு நிர்வாகம் மூலம் தமிழீழத்தை புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்க முயன்றது.

### அரசுக்குள் ஓர் அரசு

சிங்கள இராணுவமும், காவல்துறையும் தாமே தமிழீழத்தின் அரசு என்பது போலச் செயற்பட விரும்பின.

70களில் இருந்து 87 வரை சிங்கள இராணுவம் தமிழீழப் பகுதியில் அரசுக்குள் ஓர் அரசாகச் செயற்பட்டது.

சிங்கள அரசோ அல்லது இராணுவமோ, காவல் துறையோ தாம் விரும்பிய வண்ணம் தமிழீழ மண்ணில் ஆதிக்கம் செலுத்தமுடியாது என்பதை உணர்ந்திருந்த போதிலும் இந்த மாற்றத்தை ஏற்றுக்கொள்ளவும், தாங்கிக் கொள்ளவும் அவர்களால் முடியவில்லை.

இதன் ஒட்டுமொத்தமான விளைவுதான் இப்போராட்டம்.

### உண்மைகளை எடுத்துக் காட்டுகிறது

இப்போராட்டம் பல உண்மைகளை எடுத்துக்காட்டி நிற்கின்றது.

1. இடைக்காலத் தீர்வுகள் நிரந்தர அமைதியைத் தர மாட்டா.

2. சிங்கள ஆதிக்கம் தமிழீழத்தில் இனியும் தொடர முடியாது.

3. இன்றைய தமிழீழத்தின் தலைமைகளை விலைகொடுத்து வாங்கவும் முடியாது. அழுத்தம்போட்டுப் பணிய வைக்கவும் முடியாது.

4. தமிழீழ மக்களைத் தொடர்ந்து ஏமாற்ற முடியாது.

5. தமிழ் மக்களையும் முஸ்லீம் மக்களையும்பிரித்து வடக்கையும் கிழக்கையும் பிரித்து ஆளும் சூழ்ச்சி இனிமேல் சரிப்பட்டுவராது.

6. பிரேமதாசாவுக்கும் ஜே. ஆருக்கும் முன்னைய ஸ்ரீலங்கா பிரதமர்களுக்கும் தமிழ்பேசும் மக்களை அழிக்கும் - அடக்கியாளும் மன நிலையில் வேறுபாடு கிடையாது.

தமிழீழப் போராட்ட வரலாற்றில் முதன் முதலாக இராணுவ முகாம்களை விட்டு இராணுவம் விரட்டியடிக்கப்பட்டது. புலிகளுக்கு கிழக்கில் பலமில்லை, ஆதரவில்லை என்ற கிழக்குப் பகுதியில் இருந்துதான் இவர்கள் விரட்டப்பட்டார்கள்.

கல்முனை, கல்குடா, திரியாய் தோப்பூர், கிண்ணியா முகாம்களில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள்.

### இருவருக்கும் நன்கு தெரியும்

தமிழீழமே தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் பின்னால் அணிதிரண்டு நிற்கின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளை ஜே.வி.பிக்கும், தமிழர்தம் தலைவர் திரு. வே. பிரபாகரனை வரதராஜப்பெருமாளுக்கும் ஒப்பிட்டுப் பேசிஇருக்கும் பிரேமதாசாவுக்கும், ரஞ்சன் விஜயரத்தினாவுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஜே.வி.பி. அல்ல என்பதும் திரு. பிரபாகரன் பெருமாள் அல்ல என்பதும் நன்கு தெரியும்.

இத்தீவை ஆக்கிரமித்த உலகின் நாலாவது பெரிய இராணுவத்தை எதிர்த்து சிங்கள அரசோ அல்லது வேறு யாருமோ போரிடவில்லை. தமிழீழ மக்கள் தமிழீழவிடுதலைப் புலிகள் தலைமையின் கீழ் அணிதிரண்டு நின்று போராடி அவர்களை வெளியேற்றுவதிலும் வெற்றி பெற்றார்கள் என்பதை திரு. பிரேமதாசாவும், ஸ்ரீலங்கா அரசும் இராணுவமும் நினைவில் வைத்திருப்பது நல்லதாகும். (அ)

---

### இனப்படு --

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உலகச் செய்தி நிறுவனங்கள் சில செய்தி வெளியிட்டுள்ளன.

இச்செய்தியை நாம் முற்றாக மறுக்கிறோம்.

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் வெளியிட்ட செய்தியில் ஓர் உள்நோக்கம்நிறைந்துள்ளது.

எமது இயக்கத்தின் மீது அபாண்டமான பழியைச் சுமத்துவதற்காக இச்செய்தியை சிங்கள இராணுவ அதிகாரிகள் வெளியிடவில்லை. தமிழ் பேசும் மக்கள் மீது பாரிய இனப்படுகொலையை கட்டவிழ்த்து விடுவதற்காகவும், அத்தகைய இனப்படு கொலையை உலகின் முன் நியாயப்படுத்துவதற்கு முன்னோடியாகவுமே இரசாயன ஆயுதங்கள் பற்றிய பொய்ச் செய்தியை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் வெளியிட்டுள்ளனர்.

16-06-1990 அன்று காலை 6 மணிக்கு அமுலுக்கு வந்த யுத்த நிறுத்தத்தை இன்றுவரை ஸ்ரீலங்காப் படையினர் கடைப்பிடிக்கவில்லை. தொடர்ந்தும் எமது மக்கள் மீதும் எமது இயக்கத்தின் மீதும் வானில் இருந்தும், கடலில் இருந்தும், தரையில் இருந்தும் தாக்குதலை நடத்திக்கொண்டு இருக்கின்றார்கள்.

குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய பகுதிகளில் தமிழ் பேசும் மக்கள் இனப்படு கொலைக்கு உள்ளாகின்றனர். பல ஆயிரக்கணக்கானோர் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர். தமிழர் கிராமங்கள் சிங்களப் படையால் தீயிட்டுக் கொளுத்தப் படுகின்றன.

இந்த நிலையிலேயே ஸ்ரீலங்கா பாதுகாப்பு துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தினா எ மீது யுத்தத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளார்.

-இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

---

### யாழ்.போதனா--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் காணப்படுகின்றன.

கடந்த ஒரு சில தினங்கள் நிலவிய பதற்ற நிலையை அடுத்து திங்கட்கிழமையே நோயாளிகள் ஓரளவு வெளியேறி இருந்தனர். செவ்வாய் அதிகாலைத் தாக்குதலை அடுத்து முழு நோயாளிகளும் ஆஸ்பத்திரியில் இருந்து வெளியேற்றப்பட்டு ஆஸ்பத்திரி வெறிச்சோடிக் காணப்படுகிறது.

ஷெல் தாக்குதல்களில் 16ஆம் 17ஆம் 18 ஆம் வார்ட்டுகளே பெரும் அளவில் சேதம் அடைந்துள்ளன.

16 ''பி'' வார்ட்டிருந்த இருதய நோயாளி ஒருவர் ஷெல் வெடித்த அதிர்ச்சி காரணமாக மரணமானார். (இ-உ)

---

### இந்துப் . . .

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றன. முறைசாராக்கல்விக்கும் இக்கல்லூரி ஊக்கமளித்து வருகிறது.

இக்கல்லூரியின் பழைய மாணவிகள் உலகளாவிய ரீதியில் கற்றறிந்த அறிஞர்களாகத் திகழ்கின்றனர். வைத்தியர்கள், ஆய்வாளர்கள், கணக்காளர்கள், சட்டத்தரணிகள், நிர்வாக அமைப்பாளர்கள் இசை நாட்டியக் கலைஞர்கள் என்று பல்துறைகளிலும் பெருமைமிக்க பெண்களைக் கல்லூரி காண்கின்றது.

தாபகர் அவர்களது ஆவலை, குறிக்கோளை மனதில் வைத்து எதிர்காலத்திலும் எதிலும் சளைக்காது மேன்மேலும் புகழ்தேட ஆசிரியர்கள், அதிபர்கள் வழி காட்ட வேண்டும். அவர்களுக்கு உற்சாகத்தையும் உத்வேகத்தையும் நடராஜப் பெருமான் அருள வேண்டும் என்று நாம் பிரார்த்திப்போமாக!

---

### பலாலி ஷெல். . .

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

னால் மூன்று வீடுகள் சேதமுற்றன.

அட்வகேற் ஒழுங்கையில் உள்ள முத்துலிங்கம் சந்திரலிங்கம், சிவபுர வீதியில் கோணலிங்கம் கருணானந்தராசா, சிவன்கோவில் வீதியில் தங்கவேலாயுதம் பொன்னம்பலம் ஆகியோரின் வீடுகளே சேதமுற்றன.

சந்திரலிங்கம் என்பவர் முதல் வெடிச்சத்தங்கேட்டதும் படுக்கையிலிருந்து வெளியேவந்து பார்த்தபோது இரண்டாவது ஷெல் அவரது படுக்கை அறைக்கு மேலாக வெடித்துச் சிதறியதாகக் கூறப்படுகிறது. (உ-160)

---

### யாழ் கோட்டை---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றிய விடுதலைப் புலிகள் கோட்டைகுள் புகுந்து அதனைத் தமது சட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முயற்சித்து வருகின்றனர்.

விடுதலைப் புலிகள் யாழ் கோட்டையைக் கைப்பற்றுவதைத் தடுக்கும் நோக்குடன் ஸ்ரீலங்காப் படைகள் பொம்மர் மற்றும் ஹெலித் தாக்குதல்களை நேற்றுப் பெருமளவில் நடத்தின.

மோதல் நேற்று இரவுவரை விட்டு விட்டுத் தொடர்ந்த வண்ணம் இருந்தது.

நேற்றைய மோதலில் கோட்டை முகாம் படையினருக்கு ஏற்பட்ட சேத விவரங்கள் பற்றிய சரியான தகவல்கள் எதனையும் அறிந்து கொள்ள முடியவில்லை.

---

## பல முனைகளில் படையினர் முன்னேறி வருகின்றனராம்

### பாதுகாப்பு அமைச்சு அறிக்கை

கொழும்பு, ஜூன் 20

செவ்வாய் நண்பகல் வரையான 24 மணித்தியாலங்களில் பல முனைகளில் இலங்கைப் பாதுகாப்புப் படையினர் முன்னேறி வருகின்றனர்.

இவ்வாறு முன்னேறுகையில் பாதுகாப்புப் படையினர் விடுதலைப் புலிகள் போராளிகளிடம் இருந்து ஓரளவு எதிர்ப்பை எதிர்நோக்க வேண்டி இருந்தது.

பாதுகாப்பு அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

கல்முனைப் பொலீஸ் நிலையம் தீக்கிரையாக்கப்பட்டது. களுவாஞ்சிக்குடியைப் பாதுகாப்புப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

பொத்துவில் பாணமைப் பகுதியில் விசேட அதிரடிப் பொலீஸ் படையினர் விடுதலைப் புலிகளின் மறைவிடங்களைத் தாக்கிச் சேதப்படுத்தினர்.

மட்டக்களப்பு ரயில் நிலையத்தைச் சுற்றி நிலக்கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன.

கிரான் இராணுவ முகாம் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது.

மாங்குளம் முகாம் மீது செவ்வாய் அதிகாலை மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை ஆயுதப்படையினர் முறியடித்துவிட்டனர்.

-இப்படி அரசு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஒ-எ)

---

### கோட்டை ஷெல் வீச்சில்

## காயமடைந்தோர் மந்திகை தெல்லிப்பளை ஆஸ்பத்திரிகளில்

யாழ்ப்பாணம், ஜூன 20

நேற்று யாழ் கோட்டையில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள், மற்றும் பொம்மர், ஹெலி குண்டு வீச்சுகளில் காயமடைந்த பலர் மந்திகை, தெல்லிப்பளை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளோரின் பெயர், விவரங்கள் வருமாறு:-

கே.செல்லப்பா, (76 வயது) ஓட்டுமடத்தடி, எஸ் சிவபாதசுந்தரசர்மா (வயது 43) -அல்வாய், என். நாகமுத்து (வயது 75)- வண்ணார் பண்ணை. எஸ். விஜயசுந்தரி(வயது 24)- வண்ணார் பண்ணை கிருஷ்ணகுமார் (வயது 21)யாழ்ப்பாணம். (உ-9)

---

## ஷெல், ஹெலித் தாக்குதலில் நேற்று பலர் காயமடைந்தனர்

குருநகர், ஜூன் 20

நேற்று அதிகாலை யாழ் கோட்டை முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல்களினால் பலர் காயமடைந்தனர்.

மணிக்கூண்டு ஒழுங்கையில் உள்ள ஒரு வீட்டில் இருவர் காயமடைந்தனர். குருநகர் புனித யாகப்பர் ஆலயம் சிறிது சேதமுற்றது.

குருநகர், சென். செபஸ்தியன் வீதியில் வல்லிபுரம் கனகரத்தினம் (வயது 60) கனகரத்தினம் கிருஷ்ணகுமார் (வயது 19) ஆகியோர் காயமடைந்தனர்.

ஹெலி தாக்குதலில் 3 ஆம் குறுக்கு வீதியைச் சேர்ந்த [illegible] (வயது 60). அடப்பன் வீதி திருமதி ஜெயவதி யேசுதாஸ் (வயது 38) ஆகியோர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் யாழ். கடற்கரை வீதி, இருச்சிலுவை சுகநல சேவை நிலையத்தில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குருநகர், புனித காணிக்கை மாதா ஆலயமும் ஹெலித் தாக்குதலில் சேதமடைந்துள்ளது.

றேகடி, அரசமரக்கூட்டுத் தாபன வளவில் பொம்மர் குண்டொன்று வீழ்ந்து வெடித்தது. எனினும் எவரும் பாதிக்கப்படவில்லை. [சி-51]

---

### வடக்கு---

வடக்கு — கிழக்குப் பகுதிகள் தற்போது ஏற்பட்டுள்ள சண்டை மோசமடைந்து ஏனைய பகுதிகளுக்கு பரவக்கூடாது என்பதில் நான் உறுதியாக உள்ளேன்.

வடக்கு—கிழக்குப் பகுதிகளில் யுத்த நிலைமை ஏற்பட்டுள்ளதால் பாதுகாப்புச் செலவீனம் அதிகமாகி உள்ளது. இதற்கு இன்னமும் ஐந்நூறு கோடி ரூபா தேவைப்படுகின்றது.

இந்த நாட்டில் உள்ள 70 லட்சம் வறிய மக்களில் அரைவாசிப் பேருக்கு உணவு வழங்குவதற்குத் தேவைப்படும் பணத்திற்கு இது சமமானதாகும்.

பேச்சுக்கள் மூலமே பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க நான் விரும்பினேன்.

யுத்தங்களில் ஈடுபட்டால் பெருமளவு மக்கள் கொல்லப்படுவதுடன் பாதுகாப்பிற்கும் பெருமளவு பணத்தைச் செலவு செய்யவேண்டியிருக்கும்.

தற்போதைய கட்டத்திலும் மீண்டும் சாத்தான் தோன்றியிருக்கிறது. அதற்குச் சரியான பாடம் புகட்டப்பட வேண்டும்.

இப்படி ஜனாதிபதி பிரேமதாஸா சொன்னார்.

---

## இந்திய அரசு தலையிடாது பார்த்துக் கொள்ள வேண்டும்

### லலித் அத்துலத் முதலி கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 20

தற்போதைய நெருக்கடியில் இந்தியா மீண்டும் தலையிடாதபடி பார்த்துக் கொள்வது எப்படி?

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில பேசுகையில் அமைச்சர் லலித் அத்துலத் முதலி இதற்குப் பதிலளித்தார்.

சிங்களவர் தங்கள் மத்தியில் வாழும் தமிழ் மக்களை சொந்தச் சகோதரர்கள் போல் பாதுகாக்க வேண்டும்.

இப்படி சிங்கள மக்கள் நடந்து கொண்டால் இன்றைய நெருக்கடியில் இந்தியா மீண்டும் தலையிடாமல் நாம் பார்த்துக் கொள்ளலாம்.

இப்படி அமைச்சர் அத்துலத் முதலி சொன்னார். (இ-எ)

---

## இராணுவ நடவடிக்கையால் தீர்வு காண முடியாது!

### ஜெனரல் சேபால கருத்து

லண்டன், ஜூன் 20

வடக்கு - கிழக்கில நடைபெற்றுவரும் செரில்லாப் போருக்கு இராணுவ நடவடிக்கைகள் மூலம் தீர்வு காண முடியாது

- இவ்வாறு கூறினார் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளரும் லண்டனில் உள்ள இலங்கைத் தூதருமான ஜெனரல் சேபால ஆட்டிக்கல. பி.பி.ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

கெரில்லாக்கள் நேருக்கு நேர் நின்று மோதினாலன்றி யுத்த முனையில் இப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

அரசு எப்போதும் பேச்சுவார்த்தைக்குத் தயாராகவே இருக்கிறது. அமைதியான முறையில் சமாதானத் தீர்வு ஒன்றைக் காண்பதையே ஜனாதிபதி விரும்புகிறார்.

—இப்படி அவர் மேலும் சொன்னார். (உ-9)

---

### யாழ்.நகருக்கு---

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

தண்ணீர் போன்றவற்றை விநியோகிக்கவும், காயமடைந்தவர்களை எடுத்துச் செல்வதற்கும் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டி உள்ளது

★ ஆதலால் தயவுசெய்துஇந்த துரதிர்ஷ்ட நிலைக்குப் பரிகாரம் காண விடுதலைப் புலிகளை வேண்டிக் கொள்ளவும.

''உங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி'' என்றும அதில இறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்

* தரமான வர்ண நிழற்படபிரதி ஒன்று 3R/PC - 6/30, 5/90, 5/50
* விநியோகம் ஒரு வாரம் [7 Days]
* விற்பனை - வர்ண நிழற்படச் சுருள்கள்

பெற்றுக்கொள்ள நாடுங்கள்.



# உதயன்

20 - 06 - 1990 புதன்கிழமை



எம்மிடம் வர்ண நிழற்பட பிரதிகள், பிரதியாக்கம் செய்பவர்களுக்கு பட அல்பங்கள், படச்சுருள்கள் இலவசமாக வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு:

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்

111, கஸ்தூரியார் வீதி

யாழ்ப்பாணம்.,


## வடக்கு - கிழக்கில் போராடுவதற்கு மேலும் யுத்தக்கப்பல், விமானங்கள்

### 20 கோடி ரூபா குறைநிரப்பு பிரேரணை நிறைவேற்றம்

கொழும்பு, ஜூன் 20

பாதுகாப்பு அமைச்சுக்கான குறைநிரப்புத் தொகையான 270 கோடி ரூபாவுக்கு அங்கிகாரம் கோரும் பிரேரணை ஒன்று நேற்று முன்தினம் (திங்கள்) நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

பிரேரணையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா சொன்னதாவது:-

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் யுத்த நிறுத்தத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீறிவிட்டது. இதனால் வடக்கு-கிழக்கில் யுத்த நிலைமை தோன்றி உள்ளது.

இந்த நிலைமையைச் சமாளிக்க, மேலும் யுத்தக்கப்பல்கள், விமானங்களை அரசு கொள்வனவு செய்ய வேண்டி உள்ளது.

அதற்காகவே இந்தக் குறைநிரப்புப் பிரேரணை கொண்டு வரப்பட்டது.

இப்படி அமைச்சர் விஜேரத்தினா சொன்னார். (இ-எ)

## தமது விஜயம் ரத்து என்கிறார் ஹமீத்

கொழும்பு, ஜூன் 20

யுத்த நிறுத்த உடன்பாட்டைத் தொடர்ந்து, வடக்கு - கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகள் பிரதிநிதிகளுடன் சேர்ந்து பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மேற்கொள்ளவிருந்த தனது விஜயத்தை வடக்கு - கிழக்கு மாகாண சமாதானக் கமிட்டித் தலைவரும் அமைச்சருமான ஜனாப் ஹமீது ரத்துச் செய்து விட்டார்.

கொழும்பு அரசு வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன. (இ-எ)

## பிரதமர் வி.பி. சிங்கை சந்தித்து கருணாநிதி 45 நிமிடம் பேச்சு

### கிட்டுவுடனும் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்

புதுடில்லி, ஜூன் 19

இலங்கையின் வடக்கு-கிழக்கு நெருக்கடி பற்றி முதலமைச்சர் கருணாநிதி கடந்த திங்கள் பிரதமர் வி.பி. சிங்கைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

45 நிமிடங்கள் வரையில் நீடித்த இப்பேச்சுகளின் போது மத்திய அமைச்சர் முரசொலி மாறனும் உடனிருந்தார்.

'இன்றும் (செவ்வாய்) பிரதமரைச் சந்தித்துப் பேசவுள்ளேன்'—என்று பின்னர் திரு. கருணாநிதி செய்தியாளரிடம் சொன்னார்.

'லண்டனில் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகள் பிரமுகர் திரு. கிட்டு இரண்டு முறை தொலைபேசியில் தொடர்பு கொண்டு என்னுடன் பேசினார்.

'திரு கிட்டு என்னிடம் தெரிவித்த விவரங்களையும் நான் பிரதமர் சிங்கிடம் தெரிவித்தேன்.

'இலங்கைத் தமிழர் பிரச்சினையில் பிரதமரின் கருத்தும் எனது கருத்தும் அமைவாக இருந்தன. உணர்வு பூர்வமாக இருவரும் ஒத்த எண்ணங்களைக் கொண்டிருந்தோம்.

இப்படி திரு. கருணாநிதி கூறினார். (இ-எ)

## இடம் பெயர்ந்தோர் விவரம் திரட்டுமாறு பணிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ். மாவட்டத்தில் தற்போதைய நெருக்கடி நிலை காரணமாக இடம் பெயர்ந்துள்ளோர் பற்றிய விவரங்களை உடனடியாகத் திரட்டுமாறு சகல கிராமசேவை உத்தியோகஸ்த்தர்களும் கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

இதுசம்பந்தமான விவரங்களை திரட்டி தத்தம் பகுதி உதவி அரச அதிபர்களிடம் சமர்ப்பிக்கும்படி சகல கிராம சேவை உத்தியோகத்தர்களையும் யாழ். அரச அதிபர் கோட்டிருக்கிறார். (அ)

## தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம்

### அமைச்சரவை அங்கீகாரத்துக்கு

கொழும்பு, ஜூன் 20

தொண்டர் ஆசிரியர்களாகப் பணிபுரிவோருக்கு நிரந்தர ஆசிரிய நியமனம் வழங்கும் விஷயம் அமைச்சரவையின் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது.

இது தொடர்பாக அமைச்சரவையின் அங்கீகாரம் எதிர்பார்க்கப்படுவதாகக் கல்வி அமைச்சு தெரிவித்தது (இ-எ)

## நாவலர் வீதியில் ரவை விழுந்து பெண் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

நேற்றுசெவ்வாய்அதிகாலை யாழ் நகரில் மோதல் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை நகரை அண்டிய பல பகுதிகளிலும் துப்பாக்கி வெற்று ரவைகள் வந்து விழுந்தன.

இப்படியான ரவை ஒன்று அதிகாலை ஒருமணியளவில் நல்லூர் நாவலர் வீதியில் வந்து விழுந்ததில் வீட்டில் இருந்த பெண் ஒருவர் காயமடைந்தார்.

திருமதி கௌரி செந்தில்வேல்ராஜா என்னும் காயமடைந்த பிரஸ்தாப பெண் தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளார். அவருக்குச் சத்திர சிகிச்சை செய்யவேண்டி ஏற்படலாம் என்று வைத்தியர்கள் தெரிவித்திருக்கின்றனர். (ஒ)

## பயிலுநர் ஆசிரியருக்கு

கொழும்பு, ஜூன் 20

பயிலுநர் ஆசிரிய நியமனம் பெற்றோருக்கு வெளிவாரிப் பல்கலைக்கழகக் கல்வி பெறும் வசதிகளைச் செய்து கொடுக்கக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது. (இ-எ)

## இன்றைய போட்டிகள்

மிலன், ஜூன் 20

இன்று புதன் நடைபெறும் உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் வருமாறு;

'சி' பிரிவு:

பிரேஸில் எதிர் ஸ்கொட்லாந்து (இடம்: ரியூறின்)

சுவீடன் எதிர் கோஸ்டறிக்கா (இடம்: ஜெனோவா) (-எ)

## இந்தியா இனித் தலையிடாது; இலங்கைத் தூதருக்கு உறுதி

புதுடில்லி ஜூன்20

இலங்கை நெருக்கடியில் இந்தியா இனித் தலையிடாது என்று இந்திய வெளியுறவு அமைச்சர் குஜ்ரால் உறுதி அளித்திருக்கிறார்.

புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதர் டாக்டர் ஸ்டான்லி கல்பகே இத்தகவலைத் தெரிவித்ததாக ஏ.எப்.பி. ஸ்தாபனம் அறிவித்து உள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை டாக்டர் கல்பகே அமைச்சர் குஜ்ராலைச் சந்தித்து இலங்கை நெருக்கடி பற்றிய விவரங்களைத் தெரிவித்தார்.

தான் தெரிவித்த விவரங்களை அமைச்சர் குஜ்ரால் புரிந்துணர்வுடன் கேட்டறிந்து கொண்டார் என்றும் தற்போதைய நெருக்கடி இலங்கையின் உள்நாட்டு விவகாரம் என்று திரு. குஜ்ரால் கூறினார் என்றும் கல்பகே சொன்னார். (இ-எ)

## சுப்பிரமணியம் பூங்காவுக்கு அருகில் இளைஞனின்சடலம்

### விடுப்பு பார்க்க சென்றவருக்குச் சூடு

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ் கோட்டைக்குச் சமீபமாகவுள்ள சுப்பிரமணியம் பூங்காவுக்கு அருகில் நேற்று இளைஞன் ஒருவரின் சடலம் கிடக்க காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மண்நிற (பிறவுன்) நீளக் காற்சட்டையும் மண்நிற கட்டம் போட்ட சேர்ட்டும் அணிந்திருந்த இந்த இளைஞன் யார் என்பது தெரியவில்லை.

யாழ். பிறவுன் வீதியைச் சேர்ந்த ஒருவராக இந்த இளைஞர் இருக்கலாம் எனச் சொல்லப்பட்டது. இவரது சடலத்துக்கு அருகில் சைக்கிள் ஒன்றும் காணப்பட்டது.

காலையில் ஹெலி, பொம்மர் அடிகள் ஓய்ந்த பின்னர்கோட்டையை அண்டியுள்ள பகுதிகளில் என்ன நடந்தது என்று ''விடுப்பு'' பார்க்கச் சென்ற வேளையில் இவர் கோட்டைச் சிப்பாய்களினால் சுட்டுக் கொல்லப் பட்டிருக்கலாம் எனக் கருதப்பட்டது. (ஒ)

## யாழ்ப்பாண அரச அதிபர் கூட்டும் அவசரக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

அதிகாரிகளின் அவசரக் கூட்டம் ஒன்றை யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் இன்று கூட்டியிருக்கிறார்.

யாழ்.மாவட்டத்தில் நெருக்கடி நிலையினால் இடம் பெயர்ந்துள்ள மக்களின் பிரச்சினைகள் குறித்தும் —

அத்தியாவசிய பாவனைப் பொருள்களின் சீரான விநியோகத்தை உறுதிப்படுத்துவது குறித்தும் ஆராய்ந்து அவசர நடவடிக்கைகளை எடுப்பதற்காகவே இந்தக் கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது.

இன்று காலை 10 மணிக்கு நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் இந்தக் கூட்டம் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு மேலதிக அரசாங்க அதிபர், உதவி ஆணையாளர், உதவி கூட்டுறவு ஆணையாளர், சமூக சேவை உதவி இயக்குனர், பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர், உதவி அரசாங்க அதிபர்கள், பெற்றோலியக் கூட்டுத்தாபன பிராந்திய முகாமையாளர், உதவிஅரசாங்க அதிபர், அலுவலக நிர்வாக அதிகாரி ஆகியோரை அரச அதிபர் கேட்டிருக்கிறார். (உ)

## யாழ் நகரப்பகுதி நேற்று வெறிச்சோடிய நிலையில்

யாழ்ப்பாணம், ஜூன் 19

நேற்று (செவ்வாய்) அதிகாலை யாழ். கோட்டைப் பகுதியில் இடம் பெற்ற மோதல்களை அடுத்து நேற்று முழுநாளும் யாழ். நகரமும், அதனை அண்டிய பகுதிகளும் வெறிச்சோடிக் காணப்பட்டன

குருநகர்,சொட்டடி,நாவாந்துறை முஸ்லிம் வட்டாரம் போன்ற பகுதிகளிலும் சன நடமாட்டம் மிகமிகக் குறைவாகவே இருந்தது.

பெரியகடைப் பகுதியில் ஓரிருகடைக்காரர்கள்ஒற்றைக் கதவைத் திறந்து அத்தியாவசியப் பொருள்களைவிற்பனை செய்தனர்.

யாழ். ரயில்வே நிலையச் சந்தியில், ஆஸ்பத்திரி வீதியிலுள்ள கூட்டுறவுக் கடை காலை திறந்திருந்தது. அங்கு பலர் தமக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை வாங்குவதில் ஈடுபட்டிருந்ததைக் காண முடிந்தது.

இதனிடையில்,யாழ் நகரப் பகுதியில் நேற்று பாடசாலைகளும் இயங்கவில்லை. (சி-51)

## அரசு தமிழருக்கு செய்யவேண்டியது குறித்து பாதுகாப்புச் சபையில் முடிவு

கொழும்பு, ஜூன் 20

ஆட்சி, அரசியல் சம்பந்தமான முடிவுகள் அமைச்சரவையில் மேற்கொள்ளப்படுவதே வழக்கம். அதேபோல நாட்டின் பாதுகாப்பு விவகாரங்கள் குறித்தே பாதுகாப்புச் சபையில் முடிவு எடுக்கப்படும்.

ஆனால் தமிழர்களுக்கு அரசாங்கம் செய்யவுள்ள விடயங்கள் குறித்து பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டு இணக்கம் காணப்பட்டது.

இதனை நாம் சொல்லவில்லை. அரசாங்கமே அறிவித்தது.

இது சம்பந்தமாக அரசாங்கம் நேற்று விடுத்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

பாதுகாப்புச் சபைக் கூட்டம் நேற்று முன் தினம் நடத்தப்பட்டது

வடக்கு கிழக்கில் இருந்து விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகள் முறியடிக்கப்பட்டதும் அரசாங்கத்தின் நோக்கங்கள்பற்றி உடன்பாடு காணப்பட்டது.

★ இயன்றளவு விரைவில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுதல்.

★ இதன் மூலம் வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலை சுதந்திரமாகவும் நீதியான அடிப்படையில் நடத்தமுடியும்.

★ ஜனநாயக முறையிலான நிறுவனங்களை மீண்டும் இயங்கச் செய்தல்.

★ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிடியில் இருந்து தமிழ் பேசும் மக்களை விடுதலை செய்தல்.

★ நாட்டில் ஐக்கியமும் பிரதேச ஒருமைப்பாடும் நிச்சயிக்கப்படும் விதத்தில் தமிழ் பேசும் மக்களின் சட்ட பூர்வமான உரிமைகளை மீண்டும் பெற்றுத் தருவது.

அரசாங்கத்தின் நோக்கங்கள் இவை என்று பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## இணுவில், மானிப்பாய் ஆஸ்பத்திரிகளில் நோயாளர்

### சென்றல் நேர்ஷிங் ஹோமிலும் சிகிச்சை

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ் போதனா வைத்திய சாலை நேற்றுமூடப்பட்டதை அடுத்து நோயாளிகள் இணுவில், மானிப்பாய் தனியார் வைத்திய சாலைகளுக்கும். சென்றல் நேர்ஷிங் ஹோம் போன்ற தனியார் மருத்துவ மனைகளுக்கும் இடமாற்றப் பட்டனர்.

நோயாளிகளுக்குத் தேவையான மருத்துவ வசதிகளும் மேற்கண்ட தனியார் ஆஸ்பத்திரிகளுக்கு கொண்டு செல்லப் பட்டுள்ளன.

டாக்டர்களும், தாதிமாரும் மற்றும் ஆஸ்பத்திரி பணியாட்களும் அங்கு கடமைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

கடந்த திங்கட்கிழமை பதற்றம் நிலவியபோது யாழ் ஆஸ்பத்திரியில் இருந்து ஓரளவு நோயாளிகள் தாமாகவே வெளியேறி இருந்தனர்.

எஞ்சி இருந்த சுமார் 250 நோயாளிகள் நேற்று அவசரம் அவசரமாக இடமாற்றம் செய்யப்பட்டனர். (இ-உ)

## முன்னேற்பாடாக வெளியேறியதால் தப்பினர்

யாழ்ப்பாணம், ஜூன் 20

செவ்வாய் அதிகாலைமுதல் ஏவப்பட்ட ஷெல்கள் பெரும்பாலும் கோட்டைக்கு வெகு சமீபமாக உள்ள பகுதிகளிலேயே விழுந்து வெடித்தன. பொம்மர் தாக்குதல்களும் கோட்டைக்குச் சமீபமாக உள்ள போராளிகளின் சென்றிகளை இலக்குவைத்தே நடத்தப்பட்டன. கோட்டையைச் சூழ உள்ள கொட்டடி, முதலாம் குறுக்குத்தெரு, கடற்கரைவீதி மக்களில் பெரும்பாலானோர் திங்கட்கிழமையே வெளியேறி இருந்ததால் இத்தாக்குதல்களில் இருந்து பலர் தப்பக்கூடியதாக இருந்தது:

செவ்வாய் அதிகாலை ஆரம்பிக்கப்பட்ட தாக்குதல்கள் காலை ஓய்ந்த பின்பு பொது மக்கள் வெளியே நடமாடக் கூடியதாக இருந்தது, ஆனால் சனநடமாட்டம் மிகக் குறைவாகவே காணப்பட்டது. அவர்களில் பலரும் அத்தியாவசிய பொருள்களை வாங்குவதில் ஈடுபட்டிருந்தனர். (இ(

## வடக்கு - கிழக்கில் பணிபுரிய படையினருக்கு விருப்பம்

கொழும்பு, ஜூன் 20

பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்களும் [illegible] சேவையைச் சேர்ந்தவர்களும் வடக்கு--கிழக்கில் [illegible] அதிக எண்ணிக்கையில் முன் வருகிறார்கள்.

இத்தகவலை பாதுகாப்பு [illegible] னார். (ஒ-எ)

## மட்டுநகரில் பொலீஸ் தீக்கிரை

லண்டன், ஜூன் 20

[illegible]க்களப்பு பொலீஸ் நிலையம் நேற்று தீக்கிரையாக்கப்பட்டதாக பி.பி.ஸி. நேற்றிரவு அறிவித்தது. (உ)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி சரஸ்வதி கணேசன்

தோற்றம்: 19 06 1918

மறைவு: 20 - 06 - 1989

திதி: 28 - 06 - 1990

இன்பத்திலும், துன்பத்திலும் உறுதுணை புரிந்து அன்பாலும், பண்பாலும், பாசத்தாலும் எம்மை எல்லாம் வழி நடத்திய எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து இரண்டு ஆண்டுகள் சென்றாலும் என்றும் எங்கள் உள்ளங்களில் உலாவி வருவீர்கள்! உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளை.

'சரஸ்வதி வாசம்'
சுதுமலை மேற்கு,
மானிப்பாய்.

(13447)



## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் த. சின்னக்கண்டு
(நடத்துனர் வ. பி. போ. சபை)

தோற்றம்: 04 - 08 - 1930

மறைவு: 26 - 06 - 1984

திதி: 20 — 06 — 1990

தெய்வமாகி எம் குலத்தே
செழிக்க வைத்த நல்லோய் நீ
வைய வாழ்வு தனை நீத்து
வான வாழ்வை அடைந்தாலும்
ஐய! நின்னை மறவோம்
ஆண்டு பலவும் வணங்குவோம்

அன்பு மனைவி, மக்கள், மருமகள்,
பேத்தி, பேரன், மற்றும் உறவினர்கள்.

''வசந்த வாசா''
பத்தாவத்தை,
இளவாலை.

[3872]



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 [illegible]க்கத்தில் உள்ள அச்சகத்தில் 20-06-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org